بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/08/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ❖ மக்கா வெற்றி போர் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஆண்டு மாநாட்டிற்கு முன்பு மக்கா வெற்றியின் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டு வந்தன. நான் சில கடும் எதிரிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக கூறியிருந்தேன். அவர்களுள் மேலும் சிலர் உள்ளனர்.

வஹ்ஷி பின் ஹர்பு உஹது போரின்போது ஹஸ்ரத் ஹம்ஸாவை ஷஹீதாக்கி இருந்தார். மேலும் மக்கா வெற்றிக்குப் பிறகு தாயிஃபிற்கு ஓடிவிட்டார். தாயிஃப் வாசிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் போது இவர் வந்தார். மேலும் இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அப்போது ரஸூல் (ஸல்) அவர்கள் அவரிடம் உங்களுக்கு சாத்தியம் என்றால் நீங்கள் என்னிடமிருந்து உங்களது முகத்தை மறைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வஃபாத்திற்கு பிறகு முஸைலமா கத்தாப் கலகத்தை ஏற்படுத்தியபோது, வஹ்ஷி ஹஸ்ரத் ஹம்ஸாவைக் கொன்ற களங்கத்தை துடைக்கும் எண்ணத்துடன் முஸைலமாவுக்கு எதிராக போரில் பங்கு பெற்றார். போரின் போது வஹ்ஷி தனது ஈட்டியால் முஸைலமா மீது தாக்குதல் நடத்தினார். இதனால் அவன் அழிந்து விட்டான்.

அதேபோன்று அம்ர் பின் ஹாஷிமின் அடிமைப்பெண் ஒருவர் ஆவார். அவர் கவிதை பாடக்கூடியவராக இருந்தார். மக்கா வெற்றிக்கு முன்பு அவர் ரஸூல் (ஸல்) அவர்களிடம் உதவி கேட்டு விண்ணப்பித்தார். ரஸூல் (ஸல்) அவர்கள் அவரிடம் உனது பாடல்களுக்கு என்ன நேர்ந்தது என்று கேட்டார்கள். அதற்கு அவர் பத்ரு போரில் குறைஷின் தலைவர்கள் கொல்லப்பட்ட பிறகு மக்காவாசிகள் பாடல்களை கேட்பதை விட்டு விட்டார்கள் என்று கூறினார். இதனால் ரஸூல் (ஸல்) அவர்கள் அவருக்கு ஓர் ஒட்டகம் நிறைய தானியங்களை வழங்கினார்கள். ஆனால் அவர்

இஸ்லாத்துக்கு எதிராக இகழ்ந்து பாடுவதை விட்டும் விலகி இருக்கவில்லை. இவர் ஹஸ்ரத் ஹாதிபின் கடிதம் கிடைக்கப்பெற்ற அதே பெண்மணிதான். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டம் வரை உயிருடன் இருந்தார்.

அதே போன்று இப்னு ஹதலின் அடிமைப்பெண் ஹரித்னா ஆவார். இவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இகழ்ந்து கவிதை பாடி வந்தார். இவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் மக்காவில் அனைவராலும் நேசிக்கப்பட்டு வந்த ஒரு தலைவராவார். அபூ ஜஹ்லின் தந்தை வழி சகோதரர் ஆவார். ஹஸ்ரத் காலிதின் சகோதரி இவரது மனைவியாக இருந்தார்கள். மக்கா வெற்றியின் போது இவரும் அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆவும் ஹஸ்ரத் உம்மு ஹானியின் வீட்டிற்குள் நுழைந்து விட்டார்கள். ஹஸ்ரத் உம்மு ஹானி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம், தாம் அவர்களுக்கு அடைக்கலம் வழங்கியுள்ளதாக கூறினார்கள். அதற்கு அன்னார் எவருக்கு நீங்கள் அடைக்கலம் வழங்கியுள்ளீர்களோ அவருக்கு நாம் அடைக்கலம் வழங்கினோம் என்று கூறினார்கள். சில நாட்களுக்குப் பிறகு இவர் ரஸூல் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் கலிமா ஷஹாதா கூறினார்கள். ரஸூல் (ஸல்) அவர்கள் எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. ஹாரிஸே! உம்மைப் போன்ற மனிதர் இஸ்லாத்தை விட்டு எவ்வாறு விலகி இருக்க முடியும் என்று கூறினார்கள். அதற்கு ஹாரிஸ், இறைவன் மீது ஆணையாக! இஸ்லாத்தை விட்டும் விலகி இருப்பது சாத்தியமற்றதாக இருந்தது என்று கூறினார்கள்.

இதேபோன்று சுஹைல் பின் அம்ர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சம்பவம் உள்ளது. இவர் ஹுதைபியா உடன்படிக்கை செய்வதற்காக குறைஷியர்கள் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டவர் ஆவார். இவர் சுயமே கூறுகிறார்: மக்கா வெற்றிக்குப் பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெற்றி பெற்று விட்டதனால் நான் வீட்டுக்குள் அடைந்து கொண்டேன். மேலும் என் மகனை எனக்காக பாதுகாப்பு வேண்டுவதற்காக முஹம்மது (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தேன்.

ரஸூல் (ஸல்) அவர்கள் இவருக்கு அடைக்கலம் வழங்கினார்கள். மேலும் சுஹைல் போன்ற அறிவு படைத்த நேர்மையான மனிதர் அதிக காலம் இஸ்லாத்தை விட்டும் விலகி இருக்க முடியாது என்று கூறினார்கள். இந்த தகவல் சுஹைலுக்கு கிடைத்ததும் அவர் முஹம்மது (ஸல்) அவர்கள் குழந்தை பருவத்திலும் நன்மை செய்யக் கூடியவராக இருந்தார்கள்; இந்த வயதிலும் நன்மை செய்யக்கூடியவராக இருக்கிறார்கள் என்று கூறினார். ஹுனைன் போரின் போது இவர் முஷ்ரிக்காக இருந்த நிலையில் கலந்து கொண்டார். மேலும் ஹுனைன் போரிலிருந்து திரும்புகையில் இவர்

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எழுதப்பட்டுள்ளது யாதெனில், மக்கா வெற்றியின்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறைஷிய தலைவர்களுள் சுஹைலை விட அதிகமாக தொழுகை மற்றும் நோன்பை கடைபிடித்தவராக, மேலும் சதக்கா கொடுக்கக் கூடியவராக வேறெவரும் இருக்கவில்லை. அதிகமதிகமாக அழுது மன்றாடக் கூடியவராக இருந்தார். திருக்குர்ஆனை ஓதும் போது பெரும்பாலும் அழுது கொண்டிருந்தார்.

சுஹைல் பின் அம்ரின் மற்றும் ஒரு தீரச் செயலாக கூறப்படுவது யாதெனில், சுஹைல் குறைஷியர்களின் தலைசிறந்த சொற்பொழிவு ஆற்றுபவராக இருந்தார். இவர் பத்ரு போரில் நிராகரிப்பாளராக இருந்த நிலையில் முஸ்லிம்களின் கைதியாக இருந்தார். இவர் தனது உதடுகளில் அடையாளம் இட்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அத்தருணத்தில் ரஸூல் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவரது அடையாளம் இடப்பட்ட இரண்டு முன் பற்களை உடைத்து விடுங்கள். இவர் உங்களுக்கு எதிராக சொற்பொழிவாற்ற ஒருபோதும் எழுந்து நிற்க முடியாது. இவரது பல்லை பிடுங்கி விடுங்கள். வாயில் பல் இல்லை என்றால் சரியாக பேச முடியாது என்று கூறினார்கள். அப்போது ரஸூல் (ஸல்) அவர்கள் உமரே இவரை விட்டு விடுங்கள். விரைவில் இவர் நீர் புகழத்தக்க இடத்தில் நிற்பார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமரோ அவருக்கு தண்டனை பெற்றுத் தர நாடினார்கள். ரஸூல் (ஸல்) அவர்களோ இல்லை ஒன்றும் கூறாதீர். ஒரு சந்தர்ப்பம் வரும், அப்போது இவர் எப்படிப்பட்ட இடத்தில் இருப்பார் என்றால், எப்படிப்பட்ட விஷயங்களை பேசுவார் என்றால், நீர் அவரை புகழ்வீர் என்று கூறினார்கள். எவ்வாறு இருப்பினும் அவர்கள் கூறுகிறார்கள்: இந்த சந்தர்ப்பம் ரஸூல் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆனபோது மக்கத்தினர் பின் வாங்கிய நேரத்தில் வந்தது. குறைஷியர்கள் மக்காவாசிகள் முர்த்ததாவதைக் கண்டனர். மேலும் ரஸூல் (ஸல்) அவர்களால் மக்காவின் அமீராக நியமிக்கப்பட்ட ஹஸ்ரத் இதாப் பின் உஸைத் உமவீ ஒளிந்து கொண்டார். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டதும் அத்தருணத்தில் ஹஸ்ரத் சுஹைல் பின் அம்ர் சொற்பொழிவாற்றியவாறு எழுந்து நின்றார்.

மேலும் குறைஷிய கூட்டத்தினரே! நீங்கள் இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுள்ளீர்கள். இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுவிட்டு அனைவரையும் விட முதலிலேயே முர்த்ததாக ஆகிவிடாதீர்கள். இறைவன் மீது ஆணையாக! இந்த மார்க்கம் எவ்வாறு சந்திரன் மற்றும் சூரியன் உதயமாவதிலிருந்து மறைவது வரை பரவுகின்றதோ அவ்வாறே பரவி விடும் என்று கூறினார். இவ்வாறாக அன்னார் அதாவது சுஹைல் (ரலி) ஒரு நீண்ட சொற்பொழிவு ஆற்றினார்கள். இந்த சொற்பொழிவு மக்காவாசிகளின் உள்ளத்தில்

தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் அவர்கள் தவிர்ந்து கொண்டார்கள். ஒளிந்திருந்த ஹஸ்ரத் இதாப் பின் உஸைத் (ரலி) அவர்களும் அழைக்கப்பட்டார்கள். மேலும் குறைஷியர்கள் இஸ்லாத்தில் நிலைத்து விட்டனர்.

ஹஸ்ரத் உத்பா மற்றும் முஃதப் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகிறது. மக்கா வெற்றியின் நாளன்று ரஸூல் (ஸல்) அவர்கள் அபூ லஹபின் மகன்களான உத்பா மற்றும் முஃதப் தொடர்பாக கேட்டார்கள். அவர்கள் மற்ற இணைவைப்பவர்களைப் போன்று விலகிச் சென்று விட்டனர் என்று நான் கூறினேன். ரஸூல் (ஸல்) அவர்களது வழிகாட்டலின்படி அவர்கள் இருவரையும் அப்பாஸ் அவர்கள் அழைத்து வந்தார்கள். ரஸூல் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்ததும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் இருவரும் பைஅத் செய்து கொண்டார்கள். பிறகு அன்னார் எழுந்து நின்று அவர்களுடைய கரங்களைப் பற்றினார்கள். மேலும் அவர்களை ஹஜ்ரே அஸ்வத் மற்றும் காபாவின் கதவுக்கு இடையில் இருக்கின்ற பைத்துல்லாஹ்வின் சுவற்று பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். அதனை தழுவி துஆ கேட்பது நடைமுறையாகும். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான குறிப்பிட்ட இடமாகும்.

அங்கு சிறிது நேரம் துஆ கேட்டார்கள். பிறகு திரும்பி வந்தார்கள். ரஸூல் (ஸல்) அவர்களது முகத்தில் மகிழ்ச்சியை காண முடிந்தது. ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் தங்களை மகிழ்ச்சியுடன் வைப்பானாக. தங்களது முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளங்களை பார்க்கின்றேன் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் நான் என் சிறிய தந்தையின் இரண்டு மகன்களை எனது ரப்பிடம் கேட்டிருந்தேன். அவன் எனக்கு அருளி விட்டான் என்று கூறினார்கள்.

பிறகு ஸஃப்வான் பின் உமய்யா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் உள்ளது. ஸஃப்வான் பின் உமய்யா மக்காவின் தலைவர்களில் ஒருவரான உமய்யா பின் ஹல்ஃபின் மகனாவார். பத்ரு போருக்குப் பிறகு இவர் நபி (ஸல்) அவர்களை கொல்லவும் சூழ்ச்சி செய்திருந்தார். மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் உமைர் பின் வஹப் ரஸூல் (ஸல்) அவர்களிடம் அவருக்காக அடைக்கலம் வேண்டி விண்ணப்பித்திருந்தார். அதனை ரஸூல் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஸஃப்வான் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும் நான் இப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்று கூறி காலக்கெடு வேண்டினார். ரஸூல் (ஸல்) அவர்கள் தாயிஃப் மற்றும் ஹுனைன் போருக்குப் பிறகு போர் செல்வங்களை விநியோகித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஸஃப்வான் ஆடுகள் நிரம்பி இருந்த அந்த பள்ளத்தாக்கை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். ரஸூல் (ஸல்) அவர்கள் அவரது நிலையைக் கண்டு இந்த பள்ளத்தாக்கு மற்றும் அதில் உள்ள அனைத்தும் உமக்குரியதாகும் எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். ஸஃப்வான் அங்கிருந்த அனைத்து செல்வங்களையும் கைப்பற்றிக் கொண்டார். மேலும் எவ்வளவு சிறந்த வழிமுறையில் நபியின் ஆன்மா வள்ளல் குணம் கொண்டதாக இருக்கின்றதோ அதுபோன்று வேறெவராலும் இருக்க முடியாது என்று கூறி அவ்விடத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

*ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:* மக்கா வெற்றியின் போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இந்த மக்காவின் தலைவர்களில் பெரும்பாலோர் பிறகு தங்களுடைய வாழ்வில் ஒரு மாபெரும் ஆன்மிகப் புரட்சியை உருவாக்கி இருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் இதனை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை தமது கிலாஃபத் காலகட்டத்தில் மக்கா வருகை தந்தார்கள். நகரின் பெரும் தலைவர்கள் நாம் தொலைத்த நமது கண்ணியத்தை மீண்டும் பெற முடியும் என்ற எண்ணத்துடன் அன்னாரை சந்திப்பதற்காக வந்தார்கள்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்த கூட்டத்திற்கு, ஆரம்பத்தில் ஈமான் கொண்ட அடிமைகள் ஒருவர் பின் ஒருவராக வரத் தொடங்கினர். இந்த ஆரம்பத்தில் ஈமான் கொண்ட மக்கள் வரும்போது அன்னார் இந்த தலைவர்களிடம் சிறிது பின்னே செல்லுங்கள் அவர்களை முன்னே அமர விடுங்கள் என்று கூறுவார்கள். அவர்கள் பின்னே நகர்ந்து செல்லலாயினர். எதுவரை என்றால், அந்த தலைவர்கள் காலணிகளில் அமர நேர்ந்தது. அவர்களால் இந்த விஷயத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை. மேலும் எழுந்து வெளியே சென்று விட்டார்கள்.

வெளியே சென்று ஒருவர் மற்றவரிடம், பாருங்கள் இன்று நமக்கு எப்படிப்பட்ட இழிவும் ஏளனமும் ஏற்பட்டது என்று குறை கூற தொடங்கினர். அதற்கு அங்கிருந்த ஒரு இளைஞர் இதில் ஹஸ்ரத் உமரின் எந்த தவறும் இல்லை. இது நமது மூதாதையர்களின் தவறாகும். அதற்கான தண்டனை இன்று நமக்கு கிடைத்திருக்கின்றது என்று கூறினார். அவரது இந்த விஷயத்தை கேட்டு மற்றவர்கள் இந்த இழிவின் களங்கத்தை போக்க ஏதேனும் வழியும் உள்ளதா என்று கேட்க தொடங்கினர். அது குறித்து அனைவரும் தங்களுக்கிடையே ஆலோசனை செய்தார்கள்.

மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அவர்கள் இந்த விஷயத்தை கூறியதும் அன்னாரால் நடுக்கத்தின் காரணத்தினால் பேசவும் முடியவில்லை. அன்னார் கையை உயர்த்தி வடக்கு திசையை நோக்கி சைகை மட்டுமே செய்தார்கள். அதன் பொருள் யாதெனில்,

வடக்கில் அதாவது சிரியாவில் சில இஸ்லாமிய போர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒருவேளை நீங்கள் இந்த போர்களில் கலந்து கொள்வீர்கள் எனில் இதற்கு பரிகாரமாக அமையும் வாய்ப்பு இருக்கின்றது என்பதாகும். எனவே அவர்கள் அங்கிருந்து எழுந்து விரைவிலேயே அந்த போர்களில் பங்கு பெறுவதற்காக புறப்படலாயினர்.

அந்த தலைவர்களின் மகன்களில் ஒருவர்கூட உயிருடன் திரும்பவில்லை என்று வரலாறு கூறுகிறது. அனைவரும் அங்கேயே ஷஹீதாகி விட்டார்கள். இவ்வாறாக அவர்கள் தங்களது குடும்பத்தின் பெயரில் இருந்த இழிவின் கறையினை அகற்றி விட்டார்கள்.

மக்கா வெற்றி பெற்ற பிறகு உடனேயே ரஸூல் (ஸல்) அவர்கள் காஃபிர்களின் சிலைகளின் இடங்களை, மக்களது உள்ளங்களில் அந்த சிலைகளின் மீதான போலியான அச்சம் முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காக இடிக்க கட்டளையிட்டார்கள்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இன்னும் சில சம்பவங்கள் இருக்கின்றன. இனி வரும் நாட்களில் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

*இறுதியில் ஹுஸூர் அன்வர் அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை கூறினார்கள். ஜாம் ஷோரோ ஹைதராபாத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சௌத்ரி குலாம் காதிர் ஸாஹிப் அவர்களின் மகனான* ***சௌத்ரி அப்துல் கஃபூர் ஸாஹிப்*** *மற்றும் கர்த்தார்பூர், ஃபைஸலாபாதைச் சேர்ந்த* ***மதிப்பிற்குரிய முஹம்மது அலீ ஸாஹிப்*** *ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். பாவ மன்னிப்பு மற்றும் அந்தஸ்து உயர துஆ செய்தார்கள். மேலும் ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ

يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)